

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.12.2025) தலைமைச் செயலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.12.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் மூன்றாவது கூட்டத்தின் போது, நீலக் கார்பன் சேமிப்பில் தமிழ்நாட்டின் கடல்சார் வாழிடங்களின் பங்கு (BLUE CARBON WEALTH OF TAMIL NADU) குறித்த தொழில்நுட்ப அறிக்கை மற்றும் தமிழ்நாட்டின் கடற்கரையில் கைவிடப்பட்ட தொலைந்து போன மீன்பிடி உபகரணங்கள் உட்பட கடற்கரை கழிவுகளின் மதிப்பீடு அளவு ஆதாரங்கள், மாசுபாடுநிலை மற்றும் மேலாண்மை உத்திகள் தொடர்பான முன்னெடுப்பு அறிக்கை (TAMIL NADU FISHNET INITIATIVE TO REDUCE MARINE LIT TER FROM DISCARDED FISHNETS MARINE LITTER ON TAMIL NADU COAST) ஆகியவற்றை வெளியிட்டார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் 17.12.2025 அன்று மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் 38 மாவட்ட கலந்தாய்வு கூட்டம் நிறைவு பெற்றதை தொடர்ந்து இஸ்லாமியர்களின் 42 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி தமிழ்நாடு அரசு ஹஜ் இல்லம் கட்ட 32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அடிக்கல் நாட்டியதையொட்டி சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் நஜிமுதீன் சந்தித்து நன்றி தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார். உடன் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் நாசர் உள்ளார்.



சேலம் அரசு பெண்கள் கலை கல்லூரியில் மகளிர் சுய உதவிக்குழு சிறுதானிய உணவகத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (17.12.2025) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி வாணி ஈஸ்வரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

